# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | சிந்தை மகிழும் சித்திரை மாதம்! | 01 |
| 02. | சித்திரையில் செய்வது என்ன? | 01 |
| 03. | சித்திரை மாதத்தின் சிறப்புகள் | 02 |
| 04. | சித்திரையில் நிகழ்ந்த ஆன்மிக நிகழ்வுகள் | 06 |
| 05. | சித்திரை மாதத்தில் கடைபிடிக்க வேண்டிய விரதங்கள் | 08 |
| 06. | பாபமோச்சனி ஏகாதசி | 11 |
| 07. | சித்திரை மாத தேய்பிறை பிரதோஷம் | 14 |
| 08. | சூரிய பகவானின் அருளை பெற்றுத்தரும் சித்திரை அமாவாசை | 17 |
| 09. | குறையாத செல்வத்தை அள்ளி தரும் அட்சய திருதியை | 18 |
| 10. | அட்சய திருதியையில் என்னவெல்லாம் செய்யலாம்? | 22 |
| 11. | உங்கள் ராசிப்படி என்னென்ன தானம் வழங்கலாம்? | 22 |
| 12. | பிரம்மதேவன் வழிபாடு | 25 |
| 13. | காமதா ஏகாதசி | 26 |

# பொருளடக்கம்


14. சனி மஹாப்பிரதோஷம் 28

15. சித்ரா பௌர்ணமி.. விரதம் இருப்பது எப்படி? 31

16. சித்ரா பௌர்ணமி கிரிவலம் 33

17. ஆயுள் விருத்தி தரும் சித்ரகுப்தர்.. 35
சித்ரா பௌர்ணமி நாளில் மனதார வழிபடுங்கள்..!!

18. சித்திரை மாதம் ஏன் குழந்தை பிறக்கக்கூடாது 37
என்கிறார்கள் தெரியுமா?

19. சித்திரை மாதத்தில் பிறந்தவர்களுக்கான 38
குணநலன்கள்...!!

20. சித்திரை மாத சுப தினங்கள் 41

21. சந்திராஷ்டம தினங்கள் 43

22. சித்திரை மாத விரத தினங்கள் 45

23. சித்திரை மாத ராசிபலன்கள் 47



# சிந்தை மகிழும் சித்திரை மாதம்!

நமது தமிழர்களை பொறுத்தவரை மிகவும் பழங்காலத்திலிருந்தே மாதங்களை பயன்படுத்தி வருகின்றனர் என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

தமிழ் மாதங்கள் மொத்தம் பன்னிரண்டு ஆகும். பண்டைய தமிழர்கள் இரண்டு வகையாக மாதங்களை குறித்து வந்துள்ளார்கள். பூமிக்கு சார்பாக சூரியனின் இயக்கத்தை வைத்தும், பூமிக்கு சார்பாக சந்திரனின் இயக்கத்தை வைத்தும் மாதங்களை கணக்கிட்டார்கள். அவையாவன சூரிய மாதம் என்றும் சந்திர மாதம் என்றும் வழங்கப்படுகிறது.

தமிழ் மாதங்களில் முதலாமானவள் என்ற சிறப்பை பெற்றவள் சித்திரைத் தாய். சித்திரை திங்கள் பிறப்பை ஒட்டியே நாட்டின் மற்ற மாநிலங்களின் புத்தாண்டு கொண்டாட்டங்களும் அமைகின்றன.

## சித்திரையில் செய்வது என்ன?

சித்திரை திங்கள் புலருவதற்கு முதல் இரவு வீட்டில் நிலைக் கண்ணாடி முன்பாக தட்டில் பலவகையான பழங்கள், பணம், காசுகள், நகைகள் போன்றவற்றை அவரவர் விருப்பத்திற்கேற்ப வைத்து விடுவர்.

காலையில் துயில் நீங்கி எழும்போது அந்தத் தட்டின் எதிரேயுள்ள கண்ணாடியில் கண் விழிப்பர். இது காலம்காலமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனால் ஆண்டு முழுவதும் செல்வம் சேரும் என்று நம்பப்படுகிறது.

மதிய உணவில் வேப்பம்பூபச்சடி, மாங்காய்ப்பச்சடி, பருப்புவடை, நீர்மோர், பருப்புபாயாசம், மசால்வடை போன்றன இடம்பெறுதல் அவசியம்.

மனித வாழ்க்கை இனிப்பும், கசப்பும் கலந்தே இருக்கும் என்பதை எடுத்துக்காட்டும் அம்சமாக இச்செயல்பாடு கருதப்படுகிறது.

மாலை வேளையில் உறவினர் வீடுகளுக்கு சென்று, பலகாரங்களை பகிர்ந்துண்பது நிகழும்.

வாழ்க்கை என்றாலே கசப்பும், இனிப்பும் கலந்ததுதான். இப்புத்தாண்டிலும் கசப்பும், இனிப்பும் இருக்கும் என்பதன் அடையாளமாக வேப்பம்பூபச்சடி, மாங்காய்ப்பச்சடி என்பவற்றை உண்பது குறிப்பிடத்தக்க மரபாகும்.

இந்நாளில் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பரிசுப் பொருட்கள் கொடுத்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

பகிர்ந்து உண்ணல், பரிசு வழங்குதல், உறவுகளுடன் மகிழ்ந்திருத்தல் ஆகியவை தமிழ் புத்தாண்டின் சிறப்புகளாகும்.



## சித்திரை மாதத்தில் கடைபிடிக்க வேண்டிய விரதங்கள் !!

சித்திரை மாதத்தில் கடைபிடிக்கப்படும் விரதங்கள் உங்கள் வாழ்வை வளமாக்கும் என்று கூறுவார்கள். அதில் பரணி விரதம், சித்ரா பௌர்ணமி, சௌபாக்கிய சயனவிரதம், பாபமோசனிகா ஏகாதசி போன்ற விரத முறைகளைப் பற்றி இப்போது தெரிந்து கொள்வோம்.

## ராசிகளுக்கான பரிகாரங்கள் :

### மேஷம் :

மேஷ ராசிக்காரர்கள் இந்த நாளில் நெய்யில் வெண்டைக்காயை கலந்து விஷ்ணு பகவானுக்கு அர்ச்சனை செய்யவும். இந்த பரிகாரத்தை செய்வதன் மூலம் பாவங்கள் அனைத்தும் நீங்கி, பித்ரு தோஷத்தையும் போக்குகிறது.

### ரிஷபம் :

ரிஷப ராசிக்காரர்கள் இந்த நாளில் கிருஷ்ணருக்கு சர்க்கரை மிட்டாய் அடங்கிய வெண்ணெய் அர்ச்சனையை செய்யுங்கள். இந்த பரிகாரத்தை செய்வதன் மூலம் ஜாதகத்தில் இருக்கும் சந்திரன் வலுப்பெறும்.

### மிதுனம் :

மிதுன ராசிக்காரர்கள் இந்த நாளில் வாசுகிநாதருக்கு சர்க்கரை மிட்டாயை படைக்க வேண்டும். இந்த சிறிய பரிகாரத்தால், வாழ்க்கையில் இருந்துவந்த எல்லா பிரச்சனைகளும் நீங்கி வெற்றி பெறுவீர்கள்.

### கடகம் :

கடக ராசிக்காரர்கள் இந்த நாளில் மஞ்சளை பாலில் கலந்து விஷ்ணுவுக்கு அர்ச்சனை செய்ய வேண்டும். இதை செய்வதன் மூலம் ஜாதகத்தில் இருக்கும் பித்ரு தோஷம், குரு சண்டாள தோஷம் போன்றவை நீங்கும்.

### சிம்மம் :

சிம்ம ராசிக்காரர்கள் இந்த நாளில் லட்டு கோபாலுக்கு வெல்லம் சாற்றினால், வாழ்வில் சகல நன்மையும் உண்டாகும்.

### கன்னி :

கன்னி ராசிக்காரர்கள் இந்த நாளில் துளசி கும்பத்தை விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்க வேண்டும். இந்த பரிகாரத்தை செய்வதன் மூலம் ஜாதகத்தில் இருக்கும் அனைத்து தோஷங்களும் சாந்தி அடையும்.

### துலாம் :

துலாம் ராசிக்காரர்கள் இந்த நாளில் மகாவிஷ்ணுவுக்கு முல்தானி மெட்டி தடவி, கங்கை நீரால் குளிப்பாட்டுவது மிகுந்த பலனைத் தரும். இந்த பரிகாரம் நோய்,

## யாரை வழிபட வேண்டும்?

இந்த நாளில் லட்சுமி, குபேரன், சிவசக்தி, அன்னபூரணி, லட்சுமிநாராயணர் ஆகியோரின் படங்களில் ஏதாவது ஒன்றை வீட்டில் வைத்து விரதமிருந்து வழிபட்டால் குறைவில்லாத செல்வத்தை பெற்று சிறப்பான வாழ்க்கையை பெற்றிடலாம்.

## விரதம் இருப்பது எப்படி?

அட்சய திருதியை நாளில் அதிகாலை எழுந்து நீராடி, பூஜையறையில் அரிசி மாவினால் கோலம் போட வேண்டும். கோலம் போட்டபின் அதன்மேல் ஒரு பலகை வைத்து அதில் கோலமிடுங்கள். அதில் வாழை இலையை போட்டு, அதன் நடுவே பச்சரிசியை பரப்பி, அதன்மேல் செம்பில் நீர் நிரப்பி, மஞ்சள் தடவிய தேங்காய் வைத்து, அதை சுற்றிலும் மாவிலையை வைத்து கலசமாக அமைத்திடுங்கள். கலசத்திற்கு பொட்டு, பூ வையுங்கள்.

லட்சுமி, குபேரன், சிவசக்தி, அன்னபூரணி, லட்சுமிநாராயணர் ஆகியோரது படங்களில் ஒன்றை வைத்து, அதற்கு சந்தனம், குங்குமம் இட்டு மாலையிட வேண்டும். பின்னர் காமாட்சி விளக்கு அல்லது குத்துவிளக்கினை ஏற்றி வையுங்கள். மஞ்சள் பிள்ளையார் பிடித்து குங்குமம் இட்டு வாழையிலையில் வலப்பக்கம் வையுங்கள்.

நீங்கள் புதிதாக வாங்கிய பொருளை கலசத்தின் முன்பாக வைத்து தீபாராதனை காட்டி வழிபட வேண்டும். முதலில் விநாயகரை மனதார வேண்டிக்கொள்ளுங்கள். பின்னர் கலசத்தில் மகாலட்சுமியை எழுந்தருளும்படி பிரார்த்தித்து, தூப தீப ஆராதனை காட்டி வழிபட வேண்டும். அன்றைய தினம் மாலையில் கலசத்துக்கு மீண்டும் தூப தீப ஆராதனையை காட்டி, கலசத்தினை வடக்குப் பக்கமாக நகர்த்தி வையுங்கள். கலசத்தினை நகர்த்துவது விரதத்தினை நிறைவு செய்துவிட்டதாக அர்த்தம். அட்சய திருதியை நாளில் பயன்படுத்திய அரிசி, கலச தேங்காயை அடுத்த வெள்ளிக்கிழமையில் பூஜையில் உடைத்து பொங்கல் செய்யலாம்.

அட்சய திருதியை நாளில் குலதெய்வ வழிபாடு செய்வதும் முக்கியமானது. அட்சய திருதியை நாளில் விரதம் இருப்பது, பூஜைகள் செய்வது, புதிய பொருட்களை வாங்குவதை விட முக்கியமானது தானமளிப்பதும், முன்னோர் கடன்களை செய்வதும்தான்.



## அட்சய திருதியையில் என்னவெல்லாம் செய்யலாம்?

அட்சய திருதியை அன்று நாம் செய்யும் நன்மைகள் பன்மடங்காக பெருகி அழியாத பலன்களை பெற்று தரும்.

அட்சய திருதியை அன்று தர்ம சாஸ்திரங்கள் கூறும் வழியை பின்பற்றினால் நாம் கனவிலும் நினைத்துப் பார்க்காத பல நல்ல பலன்களை அடையலாம்.

அன்று நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியங்கள்:

கோவிலுக்கு செல்லுதல், புனித நீராடுதல், பித்ரு காரியம், இறைவனை வழிபடுதல் மற்றும் எளியவர்களுக்கு இயன்ற அளவு தானம் செய்தல் போன்றவை ஆகும்.

## உங்கள் ராசிப்படி என்னென்ன தானம் வழங்கலாம்?

**மேஷம் :** சாம்பார் சாதம் தானம் செய்வது நல்லது.

**ரிஷபம் :** பால் மற்றும் பால் பொருட்கள் தானம் செய்வது நல்லது.

**மிதுனம் :** பச்சைக் காய்கறிகள் தானம் செய்வது நல்லது.

**கடகம் :** தயிர் சாதம் மற்றும் நீர்மோர் தானம் செய்வது நல்லது.

**சிம்மம் :** காய்கறி சாதம் தானம் செய்வது நல்லது.

**கன்னி :** தக்காளி சாதம் தானம் செய்வது நல்லது.

**துலாம் :** பேரிச்சம் பழம் தானம் செய்வது நல்லது.

**விருச்சிகம் :** பழரசம் தானம் செய்வது நல்லது.

**தனுசு :** பானகம் தானம் செய்வது நல்லது.

மகரம் : நிலக்கடலை மற்றும் கிழங்குகள் தானம் செய்வது நல்லது.

**கும்பம் :** இளநீர் மற்றும் கனிகள் தானம் செய்வது நல்லது.

**மீனம் :** இனிப்புகள் தானம் செய்வது நல்லது.

## அட்சய திருதியைக்கு கிடைக்கும் பலன்கள்:

சிப்பிகள் லட்சுமிக்கு பிடித்த பொருளாக கருதப்படுகிறது. எனவே அட்சய திருதியை நாளில் சிப்பியை வாங்கி லட்சுமியின் பாதத்தில் வைத்து வழிபடுவது வழக்கமாக உள்ளது.

அன்றைய நாளில் கோதுமை அல்லது பச்சரிசி போன்ற தானியங்களை வாங்கலாம். அட்சய திருதியை நாளில் தங்கத்தை போலவே தானியம் வாங்குவதும் உகந்ததாக கருதப்படுகிறது.

அட்சய திருதியை நாளில் பானை வாங்குவது அதிர்ஷ்டம் தரும் என நம்பப்படுகிறது.

அட்சய திருதியையில் வெள்ளை நிறப் பொருட்கள் அல்லது மஞ்சள் நிறப் பொருட்களை வாங்குவது நல்லது என்று சாஸ்திரம் கூறுகிறது.

அன்று புது வணிகத்தினைத் துவங்குவது, கட்டிடம் கட்ட பூமி பூஜை செய்வது போன்ற புதிய முயற்சிகளை செய்தால் விருத்தியாகும் என்பது நம்பிக்கை.

அன்றைய தினத்தில் அன்னதானம், வஸ்திரதானம் செய்தல் நல்லது.





## பிரம்மதேவன் வழிபாடு..!

பொதுவாக ஒருவருடைய தலையெழுத்து எப்படி இருக்க வேண்டும் என்று முடிவு செய்வது பிரம்மதேவன் தான்.

ஏனெனில் நம்மை படைக்கும்போதே நம் தலையில், நாம் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற எழுத்தினை எழுதுவது பிரம்மதேவன் தான்.

ஒருவருடைய ஜாதகமானது சரியில்லை என்றாலும் அவருடைய தலையெழுத்தை மாற்றுவதற்கு அந்த ஜாதகத்தை எடுத்துக்கொண்டு போய் திருப்பட்டூர் பிரம்மன் கோவிலில் உள்ள பிரம்மாவின் பாதத்தில் வைத்து, அந்த ஜாதகக்காரரின் பெயரை சொல்லி அர்ச்சனை செய்து வந்தால், அந்த நபருடைய தலையெழுத்து சரியாகும் என்பது ஐதீகம்.

உங்கள் தலையெழுத்து எப்படிப்பட்டதாக இருந்தாலும் பிரம்மதேவனை நினைத்து சித்திரை மாத வியாழக்கிழமையில் மனதார வழிபட்டால் நிச்சயம் அந்த தலையெழுத்து மாறும் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை.

### பிரம்மதேவனை வழிபடும் முறை:

பிரம்மாவை வீட்டில் இருந்தே வணங்கி வழிபடலாம்.

காலை பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து குளித்து விட்டு, பூஜையறையில்

# சந்திராஷ்டம தினங்கள்

சந்திராஷ்டமம் என்பது அவரவர்களின் ஜென்ம ராசிக்கு மனோகாரகனான சந்திரன் அஷ்டம ஸ்தானம் எனப்படும் எட்டாம் இடத்தில் மறைவதாகும்.

சந்திராஷ்டம தினத்தில் மனதில் இனம்புரியாத கவலைகள் மற்றும் மற்றவர்கள் மீது வெறுப்புணர்ச்சியும், கோபமும் ஏற்படும். சந்திராஷ்டம தினங்களில் வியாபாரம் மற்றும் உத்தியோக நிமித்தமாக புதிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பின்வரும் தினத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ராசிக்காரர்கள் அன்றைய தினத்தில் பொறுமையுடனும், நிதானமாகவும் செயல்படுவதன் மூலம் தேவையற்ற விவாதங்களையும், மன வருத்தங்களையும் குறைத்து கொள்ள இயலும். வாருங்கள் உங்களின் ராசிக்கான சந்திராஷ்டம தினங்களை காண்போம். சந்திராஷ்டம தினங்கள் திருக்கணித பஞ்சாங்கத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது.

| தமிழ் மாதம் | ஆங்கில மாதம் | சந்திராஷ்டம ராசிகள் |
|---|---|---|
| சித்திரை 01 | 14.04.2025 | இன்று முழுவதும் மீனம் |
| சித்திரை 02 | 15.04.2025 | இன்று இரவு 08.27வரை மீனம் பின்பு மேஷம் |
| சித்திரை 03 | 16.04.2025 | இன்று முழுவதும் மேஷம் |
| சித்திரை 04 | 17.04.2025 | இன்று முழுவதும் மேஷம் |
| சித்திரை 05 | 18.04.2025 | இன்று காலை 08.21 வரை மேஷம் பின்பு ரிஷபம் |
| சித்திரை 06 | 19.04.2025 | இன்று முழுவதும் ரிஷபம் |
| சித்திரை 07 | 20.04.2025 | இன்று மாலை 06.04 வரை ரிஷபம் பின்பு மிதுனம் |
| சித்திரை 08 | 21.04.2025 | இன்று முழுவதும் மிதுனம் |
| சித்திரை 09 | 22.04.2025 | இன்று முழுவதும் மிதுனம் |
| சித்திரை 10 | 23.04.2025 | இன்று அதிகாலை 12.31 வரை மிதுனம் பின்பு கடகம் |
| சித்திரை 11 | 24.04.2025 | இன்று முழுவதும் கடகம் |
| சித்திரை 12 | 25.04.2025 | இன்று அதிகாலை 03.25 வரை கடகம் பின்பு சிம்மம் |
| சித்திரை 13 | 26.04.2025 | இன்று முழுவதும் சிம்மம் |
| சித்திரை 14 | 27.04.2025 | இன்று அதிகாலை 03.39 வரை சிம்மம் பின்பு கன்னி |
| சித்திரை 15 | 28.04.2025 | இன்று முழுவதும் கன்னி |
| சித்திரை 16 | 29.04.2025 | இன்று அதிகாலை 02.53 வரை கன்னி பின்பு துலாம் |
| சித்திரை 17 | 30.04.2025 | இன்று முழுவதும் துலாம் |
| சித்திரை 18 | 01.05.2025 | இன்று மாலை 03.15வரை துலாம் பின்பு விருச்சிகம் |
| சித்திரை 19 | 02.05.2025 | இன்று முழுவதும் விருச்சிகம் |
| சித்திரை 20 | 03.05.2025 | இன்று காலை 06.37 வரை விருச்சிகம் பின்பு தனுசு |
| சித்திரை 21 | 04.05.2025 | இன்று முழுவதும் தனுசு |

# பங்குனி மாத ராசிபலன்



## விடாப்பிடியாக செயல்படும் மேஷ ராசி அன்பர்களே..!!



சூரியன் ராசியில் இருப்பதால் முன்கோபத்தை குறைத்து கொண்டு செயல்படுவது நல்லது. பலம் மற்றும் பலவீனங்களை அறிந்து கொள்வீர்கள். அரசு ஊழியர்களுக்கு வேலை மாறுதல் ஏற்படும். புதியவர்களின் அறிமுகங்களால் உற்சாகம் உண்டாகும்.

செவ்வாய் 04ல் இருப்பதால் நண்பர்கள் ஆலோசனைகள் தெளிவை ஏற்படுத்தும். கூட்டாளிகளிடம் இருந்துவந்த வேறுபாடுகள் குறையும்.

புதன் 12ல் இருப்பதால் பொருளாதாரம் தொடர்பான விஷயங்களில் கவனத்துடன் செயல்படவும்.

சித்திரை 17 முதல் புதன் ராசியில் இருப்பதால் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய கவலைகள் ஏற்படும்.

சுக்கிரன் 12ல் இருப்பதால் வீண் வாக்கு வாதங்களை தவிர்க்கவும். பழைய நினைவுகளால் ஒரு விதமான தடுமாற்றம் ஏற்படும்.

குரு 02ல் இருப்பதால் குடும்ப உறுப்பினர்கள் மூலம் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

சித்திரை 28 முதல் குரு 03ல் இருப்பதால் மனதில் எண்ணிய சில பணிகளை செய்து முடிப்பீர்கள்.

சனி 11ல் இருப்பதால் உடன்பிறந்தவர்கள் ஆதரவாகச் செயல்படுவார்கள்.

ராகு 12ல் இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும்.

சித்திரை 13 முதல் ராகு 11ல் இருப்பதால் மனதில் புதுவிதமான கற்பனைகள் அதிகரிக்கும்.

கேது 06ல் இருப்பதால் நீண்ட நாள் பிரச்சனைகளுக்கு தீர்வு உண்டாகும்.

சித்திரை 13 முதல் கேது 05ல் இருப்பதால் பாகப்பிரிவினைகள் சிந்தனைகளில் பொறுமை காக்கவும்.

**வழிபாடு**: முருக வழிபாடு எல்லா பிரச்சனைகளையும் தீர்க்கும்.